Aided Managements in Tiruchirappalli Educational District.

*253 Q.—Thiru K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of Aided Managements in the Educational District of Tiruchirappalli which manage more than one high school in the District ;

(b) the number of them which have sought the permission of the Director of School Education to transfer the teachers from one school to the other under the same management ; and

(c) the number of cases, wherein permission has been granted to this effect ?

திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் மானியம் பெறும் நிர்வாகங்கள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளை நிர்வகித்து வரும் மானியம் பெறும் நிர்வாகங்களின் எண்ணிக்கை யாது ?

(இ) அவற்றில், ஒரே நிர்வாகத்தின்கீழ் உள்ள ஒரு பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்களை மற்றொரு பள்ளிக்கு மாற்ற அனுமதி கோரி எத்தனை பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியைக் கேட்டுள்ளன ?

(உ) இந்த அளவில், எத்தனை பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஏழு

(இ) இரண்டு

(உ) ஒன்று

திரு. கே. எஸ். கணபதி : அந்த ஒரு பள்ளிக்கு அனுமதி கொடுக்கப்படாததன் காரணம் என்ன ? இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பள்ளிகளை ஒரே நிர்வாகம் நடத்தி வந்தால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் விரும்பினால், ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளிக்கு அவர்களை மாற்றுவதில் ஏதேனும்

1975 ஏப்ரல் 10]

இடையூறு உள்ளதா? அண்மையிலே நாம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தில் தலைமையாசிரியர் பதவிகளுக்கு அல்லது மற்ற பதவிகளுக்கு வேண்டுமானால், ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் ஒரு நிர்வாகத்தில் இருக்குமானால், அனைத்து ஆசிரியர்களுடைய மூப்பு நிலைமையையும் ஒன்றாகக் கொண்டு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இதையும் பரிசீலனை செய்ய முடியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. ஆனால் சி.எஸ்.ஐ. பள்ளி, திருச்சி மற்றும் அதோடு சேர்ந்த பள்ளிகளைப் பொறுத்தவரையில், 1968-வது ஆண்டு மாறுதலுக்கு இடமளிக்கப்பட்டது. ஆனால் அதற்குப்பிறகு அளிக்கப்படவில்லை. புதிதாக இப்போது இயற்றப்பட்டிருக்கின்ற சட்டத்தில், ஒரே நிர்வாகத்தின்கீழ் இருந்தாலும் கூட ஒரு பள்ளியிலிருந்து வேறொரு பள்ளிக்கு மாற்றுகின்ற விதியை, வசதியை நாம் ஏற்படுத்தவில்லை. அதை ஏற்படுத்த வேண்டுமா என்பதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். அதுபற்றி விண்ணப்பங்கள் வருமேயானால், மேலும் அதிலே ஆசிரியர்களுக்குச் சங்கடங்கள் ஏதும் இல்லாமல் இருக்குமேயானால், அதுபற்றி தனியாக யோசிக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி: திருச்சியிலே ஒரு பள்ளி ராமகிருஷ்ண தபோவனம் என்று இருக்கிறது. அது மூன்று பள்ளிகளை நடத்துகிறது. அங்குள்ள ஆசிரியர்கள் தாங்களே இந்த மாற்றம் வேண்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இந்த அனுமதி வழங்கப்படவில்லை. ஏன் அவர்களுக்கு வழங்கப்படவில்லை? அவர்களுக்கு வழங்குவதிலே என்ன இடையூறு இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்குக் கொடுக்கப்படாததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. இப்போது இருக்கிற விதிமுறைகளில் அதற்கு இடம் செய்யவில்லை. அப்படிச் செய்வது நலம் பயக்கும், அதனால் ஆசிரியர்களுக்கு எந்த விதத்திலும் கேடுகள் ஏற்படாது, அவர்களே விரும்புகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: இப்படி பல பள்ளிகளை ஒரே நிர்வாகம் நடத்தினால் கார்ப்பரேட் மேனேஜ்மெண்ட் என்று வைத்துக்கொள்வதற்கு உரிமையுண்டு. அதற்கு நிர்வாகத்தினர்களே விண்ணப்பம் செய்ய வேண்டும். அந்த முறை செயல்பாட்டில் இருக்கின்றதா? அவ்வாறு இந்த நிர்வாகத்திடமிருந்து விண்ணப்பங்கள் வந்ததுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அவற்றை பள்ளிகளாகக் கருதக்கூடிய முறைதான் இருக்கிறது. கார்ப்பரேட் பாடியாக வைப்போமானால், சீனியாரிடி, மற்றவைகள் இவற்றையெல்லாம்

சேர்த்து வைத்து, அவர்கள் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால், ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றுவதிலே அதிக சிரமங்கள் ஏற்படாது. அந்தந்தப் பள்ளிகளைப் பொறுத்துத்தான் அதனுடைய பணி மூப்பு நிலைகள் வகுக்கப்படும் என்று சொன்னால், அந்த மாறுதலிலே பல்வேறு தகராறுகள் ஏற்படக்கூடும். நான்கு-ஐந்து. பள்ளிகளைச் சேர்த்து நடத்துகின்றபோது, அந்த நான்கைந்து பள்ளிகளுக்கும் சேர்ந்து ஒரு பொதுவான பணி மூப்புப் பட்டியலை வைத்திருப்பார்களேயானால், இந்த மாறுதலிலே அதிக சங்கடங்கள் இருக்காது. அதுபற்றி ஆராயலாம்.

(பிற்பகல் 4-10.)

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, சில நிர்வாகத்திற்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அனுமதி வழங்கப்படுவதன் காரணமாக அக்ரிமெண்டிலே இந்த மாறுதலை பிரிவாகச் சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் ஊதியம் வழங்கும்போது குறைந்தது 8 மாத காலம் பணியாற்றி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இவ்வாறு அரசு பள்ளிகளுக்கு அனுமதி வழங்கினால், அந்த விதியைத் தளர்த்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரே கார்ப்போரேட் பாடி என்பதை ஏற்றுக் கொண்டு, ஒரு இடத்திலேயிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுதல் செய்யலாம் என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது, இந்த 8 மாத காலம் பணி ஆற்றியிருக்கின்ற நிலைமை வராது. அவர்கள் இரண்டு பள்ளிகளிலும் ஆற்றியிருக்கிற பணிக்காலத்தைச் சேர்த்துத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ்: அப்படி வழங்கப்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி வழங்கப் படாமல் இருந்தால், அதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப் பற்றி ஆராயலாம்.

Publication of Examination Results in the Fort St. George Gazette.

*254 Q.—Thiru K.S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the practice of publishing the results of S.S.L.C., T.S.L.C., and University Examinations in the *Fort St. George Gazette* has been discontinued;

(b) if so, the year from which the practice has been discontinued; and

(c) the reason therefor?